


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 209 12.03.2026 வியாழக்கிழமை

Chennai Volume: 01 Issue: 209 Thursday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(12–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–28
பிறை: தேய்பிறை
திதி
நவமி மறுநாள்
விடியற்காலை 5.56 வரை
பிறகு தசமி.
நட்சத்திரம்:
மூலம் நள்ளிரவு 12.12 வரை
பிறகு பூராடம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி.
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி.
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | வரவு |
| மிதுனம் | நிறைவு |
| கடகம் | பாராட்டு |
| சிம்மம் | நலம் |
| கன்னி | இன்பம் |
| துலாம் | பக்தி |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | ஆக்கம் |
| மகரம் | தனம் |
| கும்பம் | களிப்பு |
| மீனம் | ஆதரவு |

## தேர்தல் முறைகேடுகள், வன்முறைகளை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது

**கொல்கத்தா, மார்ச் 12:**

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையிலான குழுவினர், மேற்கு வங்கத்தில் தேர்தல் தயார்நிலை குறித்து நேற்று கொல்கத்தாவில் உயர்மட்ட ஆய்வை மேற்கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களிடம் தலைமை தேர்தல் ஆணையர் கூறியதாவது: தேர்தல் காலங்களில் நிகழும் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் மீது பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கை கடைபிடிக்கப்படும். தேர்தலின் புனித தன்மையைச் சிதைக்கும் எந்தவொரு செயலையும் ஆணையம் ஏற்காது. வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்கான சூழல் உறுதி செய்யப்படும்.

தூய்மையான பட்டியல் வாக்காளர் பட்டியலின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதில் ஆணையம் உறுதியாக உள்ளது. தூய்மையான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதே எங்களின் முதன்மை நோக்கம். இதில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறினார்.

இருப்பினும், சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) நடவடிக்கையின் போது மேற்கு வங்கத்தில் அடையாளம் காணப்பட்ட சுமார் 60 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுவது அல்லது சரி பார்க்கப்படுவதில் நிலவும் குழப்பங்களுக்கு தீர்வு காண்பது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் நேரடியாக எந்த பதிலையும் அளிக்கவில்லை. குறிப்பாக, நிலுவையில் உள்ள இந்த பெயர்களைச் சரி பார்க்க முறையான காலக்கெடு எதையும் அவர் குறிப்பிடாதது அரசியல் வட்டாரத்தில் விவா தங்களை கிளப்பியுள்ளது.

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு தொடக்கம்:

# மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் வெளியீடு!

**சென்னை, மார்ச் 12:**

2025-26-ம் கல்வியாண்டுக்கான பிளஸ்-2 பொதுத்தேர்வு கடந்த 2-ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 10-ம் வகுப்புக்கான (எஸ்.எஸ்.எல்.சி. ) பொதுத்தேர்வு நேற்று (புதன்கிழமை) தொடங்குகிறது.

10-ம்வகுப்புபொதுத்தேர்வை 12,467 பள்ளிகளைச் சேர்ந்த 8 லட்சத்து 82 ஆயிரத்து 806 மாணவ-மாணவிகளும், தனித்தேர்வர்களாக 25 ஆயிரத்து 801 பேரும், சிறைவாசித் தேர்வர்களாக 395 பேரும் என மொத்தம் 9 லட்சத்து 9 ஆயிரத்து 2 பேர் எழுத உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 4 ஆயிரத்து 219 தேர்வு மையங்கள் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த தேர்வில் 12,292 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சொல்வதை எழுதுபவர் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. தடையில்லா மின்சாரம் வழங்கவும், தேர்வுப் பணிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிடவும், போதுமான அடிப்படை வசதிகள் தேர்வு மையங்களில் செய்துதரவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது.

தேர்வு பணியில் சுமார் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தேர்வு முறைகேடுகளை தடுக்க சுமார் 4,800-க் கும் மேற்பட்ட பறக்கும் படையினர் தேர்வு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.





தேர்வு மையங்களில் தேர்வு எழுதும் மாணவ-மாணவிகளுக்கு அம்மை நோய் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தேர்வு எழுதுவதற்கு தனி ஒரு அறையை ஏற்பாடு செய்திடவேண்டும். மருத்துவ உதவிகளுக்கு தேர்வு மையங்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனை, டாக்டர்களின் செல்போன், தொலைபேசி எண்களை முதன்மைகண்காணிப்பாளர்கள் வைத்துக்கொள்ளவேண்டும்.

மாணவர்களுக்கு வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் என்னென்ன..?

மாணவர்கள் தங்களுக்குத் தேவையான எழுதுபொருட்களைக் கொண்டு வருவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். நீலம் அல்லது கருப்பு நிற மை பேனா (Ink pen) அல்லது ஜெல் பேனா, பென்சில், ரப்பர், நீளமான ஸ்கேல் மற்றும் ஒயிட்னருக்கு மாற்றாக 'பெலிகான்' ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். எக்ஸாம் பேட் (Exam Pad), எந்தவிதமான பவுச் (Pouch), வாட்டர் பாட்டில், ஒயிட்னர் (Whitner) மற்றும் கால்குலேட்டர் ஆகியவை தேர்வு அறைக்குள் கொண்டு செல்ல அனுமதி இல்லை.

மாணவர்கள் பெல்ட் அணிவதைத் தவிர்க்க வேண்டும். காலணிகளைத் தேர்வு அறைக்கு வெளியிலேயே கழற்றி விட வேண்டும். சாதாரண முள் கடிகாரங்கள் (Analog Watch) அனுமதிக்கப்படும், ஆனால் டிஜிட்டல் கடிகாரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்வு தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாகவே மாணவர்கள் மையத்திற்கு வர வேண்டும். காலை 9:45 மணிக்கு மாணவர்கள் தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்படுவர். காலை 9:50 - 10 மணிக்கு மாணவர்கள் முன்னிலையில் வினாத்தாள் கட்டு பிரிக்கப்பட்டு வழங்கப்படும். காலை 10 - 10:10 மணிக்கு வினாத்தாளை வாசிக்க நேரம் ஒதுக்கப்படும். இக்காலத்தில் வினாக்களில் ஏதேனும் தவறுகள் உள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும். காலை 10:15 - மதியம் 1:15 மணிக்கு தேர்வு எழுதும் நேரம். ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் எச்சரிக்கை மணி அடிக்கப்படும்.

விடைத்தாளின் முதல் பக்கத்தில் உள்ள புகைப்படம், பெயர், பதிவு எண் மற்றும் பாடம் சரியாக உள்ளதா எனச் சரிபார்த்து, புகைப்படத்திற்குக் கீழே கையொப்பமிட வேண்டும். விடைத்தாளில் தேவையற்ற கிறுக்கல்கள் அல்லது அடையாளங்கள் எதையும் இடக்கூடாது. கூடுதல் வினாக்களுக்கு (Extra Questions) விடை எழுதுவதைத் தவிர்த்து, தேவையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டும் துல்லியமாக விடை அளிப்பது நல்லது. தேர்வு முடிந்ததும் மீதமுள்ள காலிப் பக்கங்களைப் பென்சிலால் குறுக்காகக் கோடிட்டு அடிக்க வேண்டும்.

தேர்வு அறையில் சக மாணவர்களுடன் பேசுவதோ அல்லது பிட் (Bit) கொண்டு செல்வதோ 'மால் பிராக்டிஸ்' (Malpractice) எனக் கருதப்பட்டு கடும்நடவடிக்கைஎடுக்கப்படும். வினாத்தாளில் எவ்வித குறிப்புகளையும் எழுதக்கூடாது. ஏதேனும் சந்தேகம் இருப்பின் அறைக் கண்காணிப்பாளரை அணுகலாம். இந்த விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றுவதன் மூலம் மாணவர்கள் எவ்விதத் தடையுமின்றித் தேர்வை எழுதிச் சிறப்பான மதிப்பெண்களைப் பெற முடியும்.

பொதுத்தேர்வுகள் தொடர்பாக மாணவர்கள், தேர்வர்கள், பொதுமக்கள் புகார்கள், கருத்துகள் மற்றும் சந்தேகங்களை அனைத்து தேர்வு நாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை 9498383075, 9498383076 ஆகிய செல்போன் எண்களில் தெரிவித்து பயன்பெற கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டிருக்கிறது.

## சிங்கப்பூரில் வேலை: இளம்பெண்களை ஏமாற்றி ரூ.24 லட்சம் சுருட்டல்- பட்டதாரி பெண் கைது

**சென்னை, மார்ச் 12:**

சென்னை கொளத்தூரை சேர்ந்தவர் சுஷ்மிதா (வயது 24). இவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதில் கூறியிருப்பதாவது:

இன்ஸ்டாகிராம் மூலம் எனக்கு மலேசியாவை சேர்ந்த ரேகா, சென்னையை சேர்ந்த துர்கா மற்றும் ஐஸ்வர்யா போன்றோர் தோழிகளாக அறிமுகம் ஆனார்கள். இந்த நிலையில், ஐஸ்வர்யா அவரது தந்தைக்கு அவசர ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும், அதற்கு பணம் தேவைப்படுவதாகவும் கூறினார். தோழிகளான நாங்கள் அவருக்கு அடிக்கடி பணம் உதவி செய்து வந்தோம். ஒரு கட்டத்தில் ஐஸ்வர்யா தனியார் நிறுவனத்தில் தான் வேலை பார்ப்பதாகவும், தன்னால் நல்ல சம்பளத்தில் வேலை வாங்கி தர முடியும் என்றும் கூறினார்.

நான் சென்னையில் பிரபல நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் வேலை பார்த்தேன். இதனால் ஐஸ்வர்யா சொன்ன வேலையில் சேர எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் சிங்கப்பூரில் செயல்படும் அந்த நிறுவனத்தில் மாதம் 4 ஆயிரம் டாலர் சம்பளத்தில் வேலை வாங்கி தருவதாக ஐஸ்வர்யா தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். தொடர்ந்து அவர் வற்புறுத்தியதால் நான் எனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சிங்கப்பூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சேர சம்மதித்தேன்.

என்னோடு இணைந்து ரேகாவும், துர்காவும் அதே நிறுவனத்தில் வேலைக்கு சேர சம்மதித்தார்கள். சிங்கப்பூர் வேலைக்கு செலவீனங்கள் உள்ளதாக ஐஸ்வர்யா எங்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக பணம் வசூலித்து வந்தார். மொத்தமாக ரூ.24 லட்சம் வரை நாங்கள் பணம் கொடுத்துவிட்டோம். திடீரென்று துர்கா மட்டும் வேலை வேண்டாம் என்று கூறி விலகிவிட்டார்.

ஐஸ்வர்யா பெரிய அளவில் நாடகமாடி எங்களிடம் இருந்து ரூ.24 லட்சத்தை மோசடி செய்துவிட்டார். அவரும் அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்று தெரியவந்தது. எங்களுக்கு போலியான பணி நியமன ஆணை கொடுத்து அவர் திட்டமிட்டு எங்களை ஏமாற்றி விட்டார். அவர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புகார் மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த புகார் மனு மீது தரமணி குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவாக இருந்த ஐஸ்வர்யாவை(28) கைது செய்தனர். விசாரணையில் அவர் கரூரை சேர்ந்தவர் என்பதும், கோடம்பாக்கத்தில் உள்ள ஒரு பெண்கள் விடுதி ஒன்றில் தங்கிருந்ததும் தெரியவந்தது. எம்.எஸ்சி. பட்டதாரியான இவர் இதுபோல் வேறு யாரிடமாவது மோசடியில் ஈடுபட்டுள்ளாரா? என்பது குறித்து தொடர்ந்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## ஹோர்மூஸ் நீரிணை மூடல்! உணவு விலை, வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும்: ஐநா எச்சரிக்கை

**புதுதில்லி, மார்ச் 12:**

ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டால், உணவுப் பொருள்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும் என ஐநா அவை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு ஆசியாவில் ஏற்படும் மோதல் காரணமாக ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டால், உணவுப் பொருள்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பு உள்ளிட்ட உலகளாவிய வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க ஆபத்துகள் ஏற்படும் என்று ஐநா அவையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக, கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் கால் பங்குக்கு வழிவகுக்கும் ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் முடியுள்ளது.ஹோர்மூஸ் நீரிணை மூடல் விளைவாக, பிராந்தியத்துக்கு அப்பால் சென்று, எரிசக்தி சந்தைகள், கடல்சார் போக்குவரத்து மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளையும் பாதிக்கின்றன.

இதனால் அதிக எரிசக்தி, உரம், போக்குவரத்துச் செலவுகள் காரணமாக, உணவுப் பொருள்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு அழுத்தங்களைத் தீவிரப்படுத்தக்கூடும்.

2024-ல் ஒரு நாளைக்கு சுமார் 20 மில்லியன் பீப்பாய்கள் (உலகளாவிய கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் தோராயமாக 25 சதவிகிதம்) ஹோர்மூஸ் நீரிணை வழியாக மேற்கொள்ளப்பட்டது.

அவற்றில் 14.3 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெய்யில் 84 சதவிகிதம், ஆசியாவை நோக்கியும், 16 சதவிகிதம் மட்டும் ஐரோப்பா மற்றும் பிற பகுதிகளை வர்த்தகம் செய்யப்பட்டது. பல வளரும் நாடுகள், தங்களின் கடன் சுமையை அடைக்க முயற்சித்து வரும்நிலையில், தற்போது ஹோர்மூஸ் நீரிணையும் அதிர்ச்சியளித்துள்ளது.

## திமுகவின் தவறான நிர்வாகம்: நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்!

### பிரதமர் மோடி விமர்சனம்!

**புதுடில்லி, மார்ச் 12:**

சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டுள்ள தமிழகம் மற்றும் கேரளத்துக்கு பிரதமர் மோடி புதன்கிழமை ஒரு நாள் பயணமாக நேற்று வந்தார்.

எர்ணாகுளத்தில் பிற்பகல் 2.15 மணியளவிலும், திருச்சியில் மாலை 6.30 மணியளவிலும் தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டங்களில் அவர் பங்கேற்கவுள்ளார். இரு மாநிலங்களிலும் மொத்தம் ரூ.16,450 கோடி (தமிழகம் ரூ.5,650 கோடி, கேரளம் ரூ.10,800 கோடி) மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கிவைப்பதுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ளார். இத்திட்டங்கள், எரிசக்தி, நெடுஞ்சாலைகள், ஊரக உள்கட்டமைப்பு, ரயில்வே உள்ளிட்ட துறைகள் சார்ந்தவையாகும்.

மார்க்சிஸ்ட், காங்கிரஸ் கூட்டணிகள் மீது சாடல்: இந்தப் பயணத்தை முன்னிட்டு, கேரளத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்), எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) மற்றும் தமிழகத்தில் ஆளும் திமுகவை விமர்சித்து, பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவுகளில் கூறியிருப்பதாவது:



கேரளத்தில் எல்டிஎஃப், யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் கொள்ளை மற்றும் தவறான நிர்வாகத்துக்கு மாறாக, தேசிய ஜனநாயக கூட்டணியின் நல்லாட்சிக் கொள்கை மேலோங்கி நிற்கிறது. எங்களது கூட்டணி வளர்ச்சி சார்ந்த அரசியலில் கவனம் செலுத்தி, கேரள இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும்.

திமுக மீது விமர்சனம்: திருச்சி பொதுக்கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களுடன் பங்கேற்கவுள்ளேன். தமிழகம் முழுவதும் எங்களது கூட்டணிக்கு பெருகிவரும் ஆதரவைக் கண்டு திமுக ஆட்டங்கண்டுள்ளது.

அக்கட்சியின் தவறான நிர்வாகம் மற்றும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளால் சலிப்படைந்துள்ள தமிழக மக்கள், தேசிய ஜனநாயக கூட்டணியின் நம்பிக்கை மற்றும் வளர்ச்சிக் கொள்கையில் இணைகின்றனர் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**மதுரை, மார்ச் 12:**

மதுரையில் இருந்து சென்னை வழியாக மலேசியாவுக்கு இரவு நேர விமான சேவையும் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், மதுரை விமான நிலையத்தை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையில், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விமான நிலைய ஓடுபாதை நீட்டிக்கப்படும். புதிய முனையம் அமைக்கப்படும்.




இன்று 6 மிகப்பெரிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஜல் ஜீவன் திட்டம் 2.0, மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்துதல், மேற்கு வங்கத்தில் சந்திராகாச்சி- கராக்பூர் 4-வது ரெயில்வே பாதை, சைந்தியா- பாகுர் 3-வது பாதை, மத்திய பிரதேசத்தில் பத்னாவார் தண்ட்லா- திமார்வானி 4 வழி நெடுஞ்சாலை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.




## மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் வட்ட தலைவர் திரு.மாலக்கொண்டையாவுக்கு அஞ்சலி




**சென்னை, மார்ச் 12:**

வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் வட்ட தலைவர் திரு.மாலக்கொண்டையா அவர்களின் மறைவையொட்டி நேற்று 11/03/2026, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை MLA அவர்களும், மாநில பொருளாளர் திரு.ரூபி மனோகரன் MLA, மாநிலத் துணைத் தலைவர் திருமதி. இமயா கக்கன், வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மா கனி பாரூக், வடசென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ஜெ.டில்லிபாபு MC, M. மோகன் குமார் உட்பட மாவட்டத்திற்கு உட்பட்ட முக்கிய நிர்வாகிகள், சர்க்கிள் தலைவர்கள், வட்டத் தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## பட்டியந்தல் ஊராட்சிக்கு புதிய வழித்தடத்தில் இரண்டு பேருந்துகள் இயக்கம்






**திருவண்ணாமலை,மார்ச் 12:**

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த மோட்டூர் ஊராட்சியில் பேருந்து பணிமனையில் டயர் யூனிட்டை திறந்து வைத்து, பட்டியந்தல் ஊராட்சிக்கு புதிய வழித்தடத்தில் இரண்டு பேருந்துகளை கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள்,உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் புதிய வழித்தடத்தில் இரண்டு பேருந்துகளை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

உடன் மாவட்ட திட்ட இயக்குனர் இரா. மணி அவர்கள், செயற்பொறியாளர் இளங்கோ அவர்கள், தொமுச மண்டல செயலாளர் சௌந்தர்ராஜன் அவர்கள், கலசபாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் திரு. A.சிவக்குமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் அன்பரசி ராஜசேகரன் அவர்கள், துறையைச் சார்ந்த அலுவலர்கள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

### கள்ளச்சந்தையில் விற்பனை

## ஊட்டியில் கேன்களில் பதுக்கிய 200 லிட்டர் பெட்ரோல்-டீசல் பறிமுதல்



**ஊட்டி, மார்ச் 12:**

நீலகிரி மாவட்டம் உதகை அருகே கேத்திபாலடா பகுதியில் உள்ள ஒரு சிறிய கடையில் கள்ளச்சந்தையில் அதிகவிலைக்கு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்படுவதாக அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப் படையில் மாவட்ட வழங்கல் அதிகாரியின் உத்தரவின்படி பறக்கும் படை அதிகாரி ஜவகர் தலைமையில் அந்தக் கடையில் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது கடையின் திரைமறைவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100-க்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் கேன்களில் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்து அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து நடத்திய சோதனையில் சுமார் 200 லிட்டர் அளவிலான பெட்ரோல் மற்றும் டீசல் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இது குறித்து கடை உரிமையாளரிடம், அதிகாரிகள் விசாரித்தபோது, அதிக விலைக்கு கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதற்காகவே எரிபொருட்களை வாங்கி பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து அதிகாரிகள் அந்த எரிபொருள் கேன்களை பறிமுதல் செய்தனர். மேலும் கடை உரிமையாளரிடம் மேலான விசாரணை நடத்த நடவடிக்கை எடுத்தனர்.

தற்போது பெட்ரோல் தட்டுப்பாடு நிலவுகின்ற சூழலில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக எரிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் விசாரணை மேற்கொண்டு, அத்தியாவசிய பொருட்கள் பதுக்கல் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

## வல்லநாட்டில் ரமலான் நோன்பை முன்னிட்டு காசநோய்க்கு சிகிச்சை எடுக்கும் மருத்துவ பயனாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்




**சென்னை, மார்ச் 12:**

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் சென்னை AAA இன்சினியரிங் கன்சல்டன்ஸ் & கன்ஸ்ட்ரஷன்ஸ் சார்பாக புனித ரமலான் நோன்பை முன்னிட்டு காசநோய்க்கு சிகிச்சை எடுக்கும் மருத்துவ பயனாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று 11.03.2026 வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து துணை இயக்குனர் மருத்துவப் பணிகள் (காசநோய்) டாக்டர்.க.சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.க.சண்முக ராஜா, நடமாடும் மருத்துவக் குழு மருத்துவ அலுவலர் டாக்டர். மு.தக்ஷனா ஆகியோர்கள் முன்னிலை வகித்தார்கள்.

முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் திரு.அ. அப்துல் ரஹீம் ஹீரா அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.

ரமலான் நோன்பை முன்னிட்டு ஏழை, எளிய காசநோய்க்கு சிகிச்சை எடுக்கும் மருத்துவ பயனாளிகளுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய், பலசரக்கு சாமான்கள் உள்ளிட்ட உதவிகளை AAA இன்சினியரிங் கன்சல்டன்ஸ் & கன்ஸ்ட்ரஷன்ஸ் உரிமையாளர் திரு.அ.அப்துல் அஜீம் அவர்கள் வழங்கினார்கள்.

துணை இயக்குனர் மருத்துவப் பணிகள் (காசநோய்) டாக்டர்.க.சுந்தரலிங்கம் அவர்கள் பேசுகையில், காசநோய்க்கு சிகிச்சை எடுக்கும் மருத்துவ பயனாளிகளுக்கு மருந்து மாத்திரை மட்டும் போதாது, அவர்களுக்கு சிகிச்சை காலத்தில் தேவையான சத்தான உணவுப் பொருட்கள் உட்கொள்ள வேண்டும்.

ஆகவே இதனை கருத்தில் கொண்டு AAA இன்சினியரிங் கன்சல்டன்ஸ் & கன்ஸ்ட்ரஷன்ஸ் சார்பில் தொடர்ந்து ஏழாவது வருடமாக பயனாளிகளுக்கு உணவுப் பொருட்களை வழங்கி வருவது மனிதநேயமிக்க செயலாகும். இந்த ஆண்டு ரூ.20,000 மதிப்புள்ள உணவுப் பொருட்களை வழங்கி உள்ளார்கள் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதார ஆய்வாளர் திரு.பி.கனகராஜ், முதுநிலை காசநோய் ஆய்வு கூட மேற்பார்வையாளர் திரு.ச.இசக்கி மகாராஜன், சுகாதார பார்வையாளர் திருமதி.ந.முத்து லட்சுமி, திரு செல்லப்பா, சுகாதாரத்துறை பணியாளர்கள், மற்றும் மருத்துவப் பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட காசநோய் மைய தீர்வு முறை அமைப்பாளர் திரு.ச.குப்புசாமி அவர்கள் நன்றி கூறினார்.

## தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உதயநிதி ஸ்டாலின் நாளை வருகை



**தருமபுரி, மார்ச் 12:**

தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகிற 13-ந்தேதி (வெள்ளிக்கிழமை) தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகிறார்.

அன்றைய தினம் கள்ளக் குறிச்சியில் இருந்து சேலம் வழியாக தருமபுரி மாவட்டம் வருகை தரும் உதயநிதி ஸ்டாலின் காலை 10 மணிக்கு தருமபுரி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்கிறார்.

இந்த விழாவில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, முடிவுபெற்ற பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து தருமபுரி-பென்னாகரம் மெயின் ரோட்டில் உள்ள ஜோதி மகாலில் காலை 11 மணிக்கு தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்து பேசுகிறார். பின்னர் காரிமங்கலம் அருகே உள்ள சி.எஸ். கார்டன் செல்கிறார். அங்கிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் செல்கிறார்.

பின்னர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செல்லும் அவர் அன்று மாலை 4.30 மணிக்கு பையூர் சந்திப்பில் தி.மு.க. கொடியேற்றுகிறார். மாலை 5 மணிக்கு கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு கிருஷ்ணகிரி தேவராஜ் மகாலில் நடைபெறம் கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பில் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்கிறார். அன்று இரவு கிருஷ்ணகிரியில் தங்கும் அவர் மறுநாள் 14-ந்தேதி (சனிக்கிழமை) காலை பர்கூர் ஒப்பதவாடியில் நடைபெறும் தி.மு.க. கொடியேற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

## ஊட்டி அரசினர் ரோஜா பூங்காவில் தோட்டக்கலை ஊழியர்கள் காத்திருப்பு போராட்டம்



**ஊட்டி, மார்ச் 12:**

நீலகிரி மாவட்டம் ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் வேலை பார்க்கும் தோட்டக்கலைத்துறை பூங்கா ஊழியர்கள் மற்றும் பண்ணை பணியாளர்கள் ஆகியோர் தினக்கூலி மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் கூறியதாவது:-

நீலகிரி, கொடைக்கானல், சென்னை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள 58 பூங்கா மற்றும் பண்ணைகளில் கடந்த 1986-ம் ஆண்டு முதல் தினக்கூலி அடிப்படையிலும், சிறப்பு காலமுறை ஊதியத்திலும் நாங்கள் பணியமர்த்தப்பட்டு வேலை பார்த்து வருகிறோம். ஆனாலும் எங்களின் பணிநிலை மற்றும் ஊதிய விஷயங்களில் போதிய முன்னேற்றம் இல்லை.

தோட்டக்கலைத் துறையில் பணியாற்றும் சிலர் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டு இருந்தாலும், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு வழங்கப்படாமல் இருப்பதால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளோம்.

எனவே சிறப்பு காலமுறை ஊதியத்தை காலமுறை ஊதியமாக மாற்றி வழங்க வேண்டும். மேலும் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிவோருக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும், தினக்கூலி பணியாளர்களுக்கு மாவட்ட கலெக்டர் நிர்ணயம் செய்த ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளோம். எங்களின் கோரிக்கைகளை அரசு விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

## திருவிடைமருதூர் நூலக வாசகர் வட்டத்தின் முப்பெரும் விழா



தஞ்சைத் தமிழ்மன்றம், கும்பேசுவரர் அரிமா சங்கம், தி.ம. தூர் கிளை நூலக வாசகர் வட்டம், இணைந்து நடத்திய மகளிர் தின விழா, நூலாய்வு, கவியரங்கம், மற்றும் கருத்தரங்கம் ஆகிய "முப்பெரும் விழா" தவத்திரு திருவடிக் குடில் சுவாமிகள் முன்நிலையில்திரு.ராஜா வரவேற்புரை யுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**செய்தி: குடந்தை பரிபூரணன்.**

## ஊஞ்சல் உற்சவம்



**தஞ்சாவூர், மார்ச் 12:**

தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (27.02.2026) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனம், மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## தமிழகத்தில் இன்று முதல் வெப்பநிலை அதிகரிக்கும்

### வானிலை ஆய்வு மையம் தகவல்



**சென்னை, மார்ச் 12:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

13-ந்தேதி முதல் 16-ந்தேதி வரை தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

17-ந்தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதனிடையே இன்று முதல் 15-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## கைதி உயிரிழப்பு விவகாரம் - மானாமதுரையில் 4-வது நாளாக தொடரும் சாலை மறியல்



**மானாமதுரை, மார்ச் 12:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் 2 பேரை அரிவாளால் வெட்டிய சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஆகாஷ் டெல்சன் என்பவருக்கு கால் முறிவு ஏற்பட்டதால் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆனால் அங்கு அவர் திடீரென உயிரிழந்தார்.

விசாரணை கைதி உயிரிழப்புக்கு காரணமான மானாமதுரை போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், ரூ. 50 லட்சம் நிவாரணம், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 8-ந்தேதி காலை 10 மணி முதல் மானாமதுரை பஸ் நிலையம் அருகே நான்கு வழிச்சாலையில் ஆகாஷ் டெலிவிசன் உறவினர்கள், மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இந்த போராட் டத்துக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் ஆதரவு தெரிவித்து பங்கேற்றனர். சாலை மறியல் காரணமாக மதுரை-ராமேசுவரம் நான்கு வழிச்சாலையில் வாகன போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது.கடந்த இரண்டு நாட்களாக அமைச்சர் பெரிய கருப்பன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத், அதிகாரிகள் என பல தரப்பினரும் சமரசபேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் இதில் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

சாலையின் நடுவே பந்தல் அமைத்து அங்கேயே தூங்கி எழுந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.இரண்டு நாட்களாக போராட்டம் நடந்த பகுதியில் பள்ளி கல்லூரி வாகனங்கள், ஆம்புலன்ஸ் உள்ளிட்டவை மட்டும் அனுமதிக்கப்பட்டன. ஆனால் நேற்று அவையும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் அந்த பகுதியில் உள்ள இரண்டு தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. பொதுத்தேர்வு நடைபெறும் நேரத்தில் பள்ளிக்கு செல்ல முடியாததால் மாணவ-மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளாகினர். மதுரை ஐகோர்ட்டும் இந்த வழக்கு விசாரணையின்போது மக்களை சிரமப்படுத்தும் வகையில் ஏன் மறியல் போராட்டத்தை நடத்துகிறீர்கள் என கேள்வி எழுப்பியது.

இதனிடையே ஆகாஷ் டெல்சன் உயிரிழப்புக்கு காரணமான போலீசார் மீது வழக்குப்பதிவு செய்யும் வரை எங்களது போராட்டம் நடைபெறும் என தெரிவித்து இன்றும் நான்காவது நாளாக மதுரை-ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சியினர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கடந்த நான்கு நாட்களாக நடந்துவரும் மறியலால் மானாமதுரை பகுதியில் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மதுரையில் ராமேசுவரம் வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வாகனங்கள் மாற்றுப் பாதையில் இயக்குவதால் பல கிலோமீட்டர் தூரம் சுற்றி செல்லும் நிலை உள்ளது. மாணவ-மாணவிகளும் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். எனவே இதற்கு விரைந்து தீர்வு காண வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901







## WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:
8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## கவிதை அரங்கம்!






ஊடலை கூட
காதலாய் மாற்றும்
மாய வித்தை
எங்கிருந்து
கற்றாயோ கள்வனே

பார்வைத்தீண்டல்
பரவசம்தான் என்றாலும்
அருகருகே இருக்கும்
போது
அதிகமாய் துடிக்கிறது
இதயம்

விழிகளை சற்றே
விலக்கிக்கொள்ளேன்

பூவுக்குள் உணர்ந்த
அன்பை பூகம்பமாக்கிவிட்டு
தடயமே இல்லாமல்
தானே அழித்துவிட்டது
காலம் ரணமாகிப்போன
இதயத்திற்கு
ஒத்தடமாய் இருப்பது
உன் நினைவு மட்டுமே

## வாழ்க்கை தத்துவம்...



சந்தோசத்த தான் நம்ம சுத்தி இருக்குற எல்லாருகிட்டயும் பகிர்ந்துக்கணும். கஷ்டம்னு வந்தா தனியா நின்னு ஜெயிக்கிறவன் தான் மனுஷன்.

வாழ்க்கையில் ரெண்டு விஷயத்த எப்பவும் மறக்கக் கூடாது. விரும்பி எது வந்தாலும் “TAKE CARE”, விலகி எது போனாலும் “DON'T CARE”.

இன்பத்தை “INBOX” இல் வை, கவலையை “OUTBOX” இல் வை, புன்னகையை “SENT” பண்ணு, கோபத்தை “DELETE” பண்ணு, மனதை “VIBRATE” செய்து பார், வாழ்க்கை தானா “RINGTONE” ஆக மாறும்.

## "ஒரு உருண்டை சாதம்"



பக்கவாதம் வந்து கட்டிலில் கிடந்தார் சோமு. காலம் முழுக்க சுமந்த நினைவுகள் அசைய முடியாதபடி அவரை கட்டிப் போட்டிருந்தது.

தினமும் மகள் ராதா உணவு கொண்டு வருவாள். ஆனால் அவர் அதை ஏற்க மாட்டார்.

“நீ ஏன் கொண்டு வர்றே... போய் அம்மாவைக் கொண்டு வரச் சொல்லு” கத்துவார்.

ராதா முகம் வாடித் திரும்பிச் செல்லுவாள்.

வீட்டிலே எல்லோரும் பேச ஆரம்பித்தார்கள். "கிழத்துக்கு லொள்ளு பாரு... இத்தனை வயசாகியும் பொண்டாட்டி கைல தான் சாப்பிடுமாம்."

நக்கல், நையாண்டி, எள்ளல், ஏகடியம் எல்லாம் அளவுக்கதிகமாகிப் போய் விட ஒரு நாள் மனைவி ஜோதியே பொறுமை இழந்து கேட்டு விட்டாள்.

“இது உங்களுக்கே நல்லாயிருக்கா? பொண்ணு மனசு எவ்வளவு வலிக்கும் தெரியுமா?... எல்லோரும் கேவலமாய்ப் பேசுறாங்க...”

சோமு பதில் சொல்லவில்லை. ஆனால் கண்கள் மட்டும் ஈரமாயின.

உதடுகள் தழுதழுக்க மெல்லப் பேச ஆரம்பித்தார். "நம்ம பொண்ணு ராதாவோட வலது கை... கோணல் கை... அது எப்படி ஆச்சுனு தெரியுமா?”

ஜோதி கூர்ந்து கவனிக்க, "அவ சின்ன வயசுல ஸ்கூலுக்குப் போக மாட்டேன்னு அடம் பிடிச்சா....நான்... நான் விட்ட ஒரு அறைல அவ தெறிச்சுப் போய் விழுந்தா.”

அவர் குரல் உடைந்தது.

" அப்ப அவ மணிக்கட்டு ஒடைஞ்சு போச்சு... சரியான வைத்தியம் பாக்காம... வெறும் எண்ணைக் கட்டு... மட்டும் போட்டதுல நிரந்தரக் கோணலாயிடுச்சு.”

சோமு கண்கள் வழியாக கண்ணீர் ஓடியது.

“அந்த கையால அவ உணவு குடுக்கும் போதெல்லாம்...என் மனசு சாப்பிட மறுக்குது ஜோதி... மனசு வலிக்குது ஜோதி"

கதவருகே நின்றிருந்த ராதா எல்லாம் கேட்டு விட்டு மெல்ல வந்தாள். தட்டைக் கையிலெடுத்தாள்.

அதே கோணல் கையால் ஒரு உருண்டை செய்து, அப்பாவின் வாயருகே கொண்டு போனாள்.

“இது உங்களுக்கான என் அன்பு அப்பா”என்றாள்.

சோமு முதல் முறையாக மகள் கைலிருந்து உணவை வாங்கிக் கொண்டார்.

(முற்றும்)



முகில் தினகரன்
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: டியர்.. நீங்க என்னை எவ்வளவு காதிலிக்கிறேன்னு சொல்ல முடியுமா?*

*மனைவி: ஆஹா என்னோட டீப் லவ்.. 72 % டி என் செல்லம்..*

*போங்க.. டார்லிங் நீங்க மோசம் அப்ப அந்த 28 % எவளுக்காம்?*

*அட கிறுக்கி.. அழகுப் பொருள்களுக்கு 28 % ஜிஎஸ்டி கவர்மெண்டுல புடிச்சுக்குவாண்டி*



## தினம் ஒரு சமையல்



### பால் கேசரி

**தேவையான பொருட்கள்:**

*கப்ரவை - 1*
*கப்பால் - 3*
*பாதாம் -10*
*முந்திரி - 10*
*திராட்சை - 15*
*ட்டி புரூட்டி - 3 ஸ்பூன்டு*
*சர்க்கரை - 1 கப்*
*ஏலக்காய்*
*நெய் - 6 ஸ்பூ*

**செய்முறை:**



முதலில் தேவையானப் பொருட்களை ரெடி பண்ணிக்கொள்ளவும்.பின் ஒரு வாணலியில் 2 ஸ்பூன் நெய்விட்டு ரவையை வாசம் வரும்வரை வறுக்கவும்.

பின் அதில் நான் முதலில் 2 கப் பால் சேர்த்தேன்.

பின்1 கப் மீண்டும்சேர்த்து நன்குகட்டி விழாமல் கலந்துவிடவும்.பின் 1 கப் சர்க்கரை சேர்க்கவும்.பின் மீதி நெய் சேர்க்கவும்.

ஏலக்காய் தூள் சேர்க்கவும்.இப்போது ரொம்ப கவனமாக நன்கு கலந்துவிடவும். சர்க்கரை சேர்த்ததும் கட்டி விழ ஆரம்பிக்கும்.. வேகமாக கலந்து விட்டால் கட்டி விழாது.ரொம்ப சாப்டாக இருக்கும்.பின் வேறு வாணலியில் நெய் கொஞ்சம் ஊற்றி முந்திரி,திராட்சை, பாதாம்,டூட்டி புரூட்டிஎல்லாம் நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.கேசரி ஒட்டாமல் அழகாக வரும்.

அப்போதுகேசரியில் முந்திரிமற்றும் எல்லாவற்றையும் சேர்க்கவும். பார்க்கவே அழகாக இருக்கும்.

பளபள வென்று சுவையான தித்தித்பான குழந்தை களுக்குபிடித்த பால்கேசரி ரெடி.

## வகுளம் பயன்கள்



வகுளம் (மகிழம்) மரம், அதன் காய்ந்த நிலையிலும் நறுமணம் வீசக்கூடிய பூக்கள், மருத்துவ குணம் கொண்ட பட்டை, மற்றும் நிழல் தரும் பசுமையான இலைகளுக்குப் பெயர் பெற்றது. இதன் பூக்கள் மலச்சிக்கல், இரத்த சோகை மற்றும் உடல் உஷ்ணத்தைத் தணிக்கவும், பட்டை தோல் நோய்களுக்கான மருத்துவத்திலும் பயன்படுகிறது, மேலும் இது சிறந்த கோவில் தலவிருட்சமாகவும் போற்றப்படுகிறது.

வகுளம் (மகிழம்) மரத்தின் முக்கிய பயன்கள்:

மருத்துவ பயன்கள்:

உடல் உஷ்ணம்: மகிழம் பூ உடல் வெப்பத்தைத் தணித்து, உடலை குளிர்ச்சியாக வைக்க உதவுகிறது.

வாய் ஆரோக்கியம்: இதன் பட்டை மற்றும் இலைகள் வாய் துர்நாற்றம், பல் வலி மற்றும் ஈறு நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகின்றன.

தோல் நோய்கள்: மகிழ மரத்தின் பட்டை மற்றும் பூக்கள் தோல் தொடர்பான நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மலச்சிக்கல்: வயிற்றுப் பிரச்சனைகளை சரிசெய்ய உதவுகிறது.

இரத்த சோகை: இரத்த சோகையை போக்கி உடலை வலுவாக்க உதவுகிறது.

இதர பயன்கள்:

நறுமணம்: காய்ந்தாலும் மணம் குறையாத பூக்களால், மாலைகள் மற்றும் நறுமணப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

நிழல் மரம்: வீடுகள் மற்றும் சாலைகளில் நட்டு வளர்க்கப்படும் பசுமையான நிழல் மரம்.

ஆன்மீகம்: பல கோவில்களில் தலவிருட்சமாக (திருவண்ணாமலை, திருவொற்றியூர்) போற்றப்படுகிறது.

மரம்: இதன் மரக்கட்டை வலுவானது மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது.

மகிழம்பூ பொடியை சூடான நீர் அல்லது தேனுடன் கலந்து உணவுக்குப் பின் உட்கொள்வது, உடல் வனப்பைப் பெருக்க உதவும் என்று கூறப்படுகிறது.

## விஜய் சேதுபதி விலகல் என வதந்தி.. அரசன் படத்தில் இணைந்த இரண்டு பிரபலங்கள்..



இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில், கலைப்புலி எஸ். தாணு தயாரிப்பில், சிம்பு நடிப்பில் உருவாகி வரும் படம் அரசன். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு கோவில்பட்டியில் நடைபெற்று முடிந்தது.

இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க கமிட்டாகியிருந்த விஜய் சேதுபதி திடீரென விலகிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், அது உண்மையில்லை வெறும் வதந்திதான் என பின்னர் தெரியவந்தது.

இதை தொடர்ந்து இரண்டாம்கட்ட படப்பிடிப்பில் நடிகை சைத்ரா ரெட்டி இப்படத்தில் இணைந்தார். இவர் நடிப்பில் இதற்கு முன் 3BHK மற்றும் மை லார்ட் ஆகிய இரு படங்கள் தமிழில் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், அரசன் படத்தில் மற்றும் சில பிரபலங்கள் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, நடிகர் விக்ராந்த் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க கமிட்டாகியுள்ளாராம். மேலும் டூரிஸ்ட் பேமிலி படத்தில் நடித்திருந்த கமலேஷ் இப்படத்தில் இணையவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.




ஸ்ரீலீலா அழகிய சேலையில் போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறது. அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ..

## முரட்டு சிங்கிள் ஹீரோவுடன் ஜோடி சேரும் நடிகை நயன்தாரா.. யார் தெரியுமா?

தென்னிந்திய சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகைகளில் ஒருவர் நயன்தாரா. இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த மன சங்கர வர பிரசாத் காரு படம் மாபெரும் வெற்றி பெற்றது.

இதை தொடர்ந்து மூக்குத்தி அம்மன் 2, Hi, ராக்காயி, மண்ணாங்கட்டி என பல திரைப்படங்கள் நயன்தாரா நடிப்பில் வெளிவரவுள்ளன. இந்த படங்களை திரையில் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

ஷாருக்கான் நடிப்பில் வெளிவந்த ஜவான் திரைப்படத்தின் மூலம் பாலிவுட் சினிமாவில் கதாநாயகியாக நயன்தாரா அறிமுகமானார். முதல் இந்தி படமே மாபெரும் வெற்றிபெற்றது. அடுத்ததாக நயன்தாரா நடிக்கப்போகும் இந்தி படம் எது என்பது குறித்து கேள்வி எழுந்து வந்த நிலையில், தற்போது அதுகுறித்த தகவல் வெளியாகியுள்ளது.



பாலிவுட் சினிமாவில் உச்ச நட்சத்திரங்களில் ஒருவராகவும், 60 வயதாகியும் திருமணம் செய்துகொள்ளாமல் முரட்டு சிங்கிளாக இருப்பவர் சல்மான் கான். இவருடைய அடுத்த திரைப்படத்தில் நயன்தாரா கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார் என கூறப்படுகிறது.

இதன்மூலம், முதல் முறையாக சல்மான் கானுடன் இணைந்து நயன்தாரா நடிக்கவிருக்கிறார். விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியாகிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# கோவிலுக்குள் மணி அடித்துவிட்டு வணங்குவது ஏன் தெரியுமா?

கோவிலில் மணி அடிப்பதற்கு பின் ஒளிந்துள்ள ரகசியம்..!!

கோவிலுக்கு செல்லும் அனைவரும் ஏன்? எதற்கு? என தெரியாமல் பின்பற்றும் விஷயங்களில் ஒன்று கோவில் மணி அடிப்பது.

கோவிலில் மணி அடித்துவிட்டு வணங்கினால் கடவுள் காது கொடுத்து கேட்பார் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். கோவிலில் அடிக்கும் மணி ஓசைக்கும், மனிதர்களின் மூளைக்கும் இடையே தொடர்பு உள்ளது என சாஸ்திரத்தில் நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். கோவிலுக்கு செல்லும் அனைவரும் மணி அடிப்பது ஏன்?

பூஜை செய்யும் போது பயன்படுத்தப்படும் ஒரு பொருளாக உள்ள மணி ஓசையின் பின் ஒரு அறிவியல் நுண்ணறிவும் இருக்கிறது.

கோவில் மணி அடித்துவிட்டு வணங்கினால், தங்களின் வேண்டுதலை கடவுள் காது கொடுத்து கேட்பார் என்று சிலர் நினைப்பார்கள். ஆனால் அது உண்மை அல்ல.

ஆகம சாஸ்திரங்களின் படி, கோவில் மணியில் இருந்து வெளிப்படும் ஓசை எதிர்மறை சக்திகளை விரட்டி, மனதிற்கும், உடலுக்கும் நேர்மறை



சக்தியை அதிகரிக்க செய்கிறது.

கோவில் மணியின் ஓசை மனிதனின் மூளை செயல்திறனை மேலோங்க செய்கிறது என்று அறிவியலில் ஒரு பின்னணி இருக்கிறது.

கோவில் மணியின் ஓசை தனித்துவமாக கேட்பது ஏன்?
கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியில் ஒரு தனித்துவம் இருக்கும். அதற்கு கோவில் மணிகளில் உள்ள கேட்மியம், துத்தநாகம், நிக்கல், குரோமியம் மற்றும் மாங்கனீசு போன்ற உலோகங்கள் தான் காரணமாகும்.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியானது, மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களை ஒரு சமநிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.

கோவில் மணியில் இருந்து வெளிப்படும் சத்தம் உடலில் நேர்மறை ஆற்றல் மற்றும் மூளையில் செயல்திறனை அதிகரிக்கச் செய்து, விழிப்புணர்வை மேம்படுத்தி, மனதிற்கு நிறைவான அமைதி மற்றும் நிம்மதியை அளிக்கிறது.

மணியடிப்பது என்பது துர்தேவதைகளை விரட்டுவதற்காக என்று பெரியோர்களால் சொல்லப்பட்டுள்ளது. பூஜையின்போது மணியை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக 'ஆகமார்த்தம் து தேவாநாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம், கண்டாரவம் கரோம்யாதௌ தேவதாஹ்வான லாஞ்ச்சநம்' என்ற மந்திரத்தைச் சொல்வார்கள்.

தீய சக்திகள் விலகி இறைசாந்நித்யம் இந்த இடத்தில் பெருகட்டும் என்பது இதன் பொருள். மணியடிப்பது என்பது அதற்காக மட்டுமல்ல. பூஜையின்போது நமது மனம் அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தாலும், முக்கியமான தருணத்திலாவது இறைவனின்பால் நமது மனம் ஒன்றவேண்டும் என்பதற்காகவே மணி ஓசையை எழுப்புகிறார்கள்.

தீபாராதனையின்போது மணி ஓசை எழுவதால் நாம் அநாவசிய பேச்சுகளை நிறுத்தி இறைவனின்பால் நமது சிந்தனையைச் செலுத்துகிறோம்.

மணிஓசை கேட்டதும் நம்மையும் அறியாமல் நமது கரங்கள் இறைவனைத் தொழுகின்றன.

சிந்தனையை ஒருமுகப்படுத்துவதற்காக மணியடிக்கப்படுகிறது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருத்து.

நைவேத்யம் செய்யும்போது கண்டிப்பாக மணிஓசையை எழுப்ப வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

மணி ஓசையைக் கேட்டதும் இறைவன் ஓடோடி வந்து நமது நைவேத்யத்தை ஏற்றுக்கொள்கிறான் என்கிறது ஆகம சாஸ்திரம்

மணி ஓசையினால் நமது சிந்தனையும் ஒருமுகப்படுகிறது. சிரத்தையோடு இறைவனின்பால் நமது கவனமும் செல்கிறது.

சிரத்தையுடன் கூடிய பக்தியைத்தான் இறைவன் நம்மிடம் இருந்து எதிர்பார்க்கிறான்.

நைவேத்யம், தீபாராதனை நேரங்கள் தவிர வெறுமனே மணியை அடிப்பது தவறு.

**BALACHANDAR**


# தினம் ஒரு தலைவர்கள்
# டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் வரலாறு

1947 அன்னு சுகநாதிரம் அளிக்கப்பட்டது .டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் 3 டிசம்பர் 1884 28 பிப்ரவரி 1963) இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். காங்கிரஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவர். 1950 முதல் 1962 வரை இந்திய குடியரசுத் தலைவராக இருந்தார். இரு முறை குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர்.

### இளமை
இவர் 1884ம் ஆண்டு டிசம்பர் 3ம் தேதி பீகாரின் சிவான் எனுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை மகாவீர சாகி பெர்சிய மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் தேர்ந்திருந்தார். இவரது தாயார் கமலேசுவரி தேவி சமயப் பற்றுள்ள ஒரு மாது ஆவார். சிறு வயதில் தன் குடும்பத்தாராலும் நண்பர்களாலும் 'ராஜன்' என அழைக்கப்பட்டார். தனது 12 ஆம் வயதில் ராஜவன்சி தேவி என்ற பெண்ணை மணந்தார். திருமணத்திற்குப் பின்பு பிரசாத் தனது தமையனார் மகேந்திர பிரசாத்துடன் வசித்து வந்தார்.

### கல்வி
இராஜேந்திர பிரசாத்திற்கு ஐந்து வயதானபோது ஒரு இஸ்லாமிய மௌல்வியிடம் பெர்சியம், இந்தி மற்றும் கணிதம் கற்க இவருடைய பெற்றோர் ஏற்பாடு செய்தனர். சாப்ரா மாவட்டத்திலுள்ள பள்ளியில் பிரசாத் தனது தொடக்கக் கல்வியை முடித்தார். பின்னர் டி. கே கோஷ் அகாடமியில் இரண்டாண்டு பயின்றார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வு எழுதி மாதம் ரூ.30 உதவித் தொகைப் பெற்று தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். கல்கத்தா





பல்கலைக்கழகத்தில் பயின்று 1907ம் ஆண்டு பொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். படிக்கும் காலத்தில் பீகார் மாணவர் அவையை உருவாக்கினார் இராசேந்திர பிரசாத். பல்வேறு கல்லூரிகளில் பேராசிரியராகவும் பின்னர் கல்லூரி முதல்வராகவும் செயலாற்றியுள்ளார். பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே சட்டத்தில் மேற்படிப்பு படித்து தேர்வில் முதல் மாணவனாக தங்கப் பதக்கத்தை வென்றார். பின்னர் சட்டத்துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

### விடுதலைப்போரில் ஈடுபாடு
மிகப் புகழ் பெற்ற வழக்குரைஞராக பணியாற்றி வந்த இவர், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தால் கவரப்பட்டு தன் வேலையைத் துறந்து, அவ்வியக்கத்தில் இணைந்தார். தரையைத் துடைப்பது ,கழிவறையைக் கழுவுவது,பாத்திரம் துலக்குவது போன்ற பணிகளை ஆசிரமத்தில் செய்து வந்தார். பீகார் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்ட கிளம்பினார் ஆங்கிலேய கவர்னர் திரட்டியது மாதிரி மூன்று மடங்கு அதிகமாக முப்பத்தி எட்டு லட்சம் திரட்டினார். 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தில் கலந்து கொண்டதால் 1942ம் ஆண்டு கைது செய்யப்பட்டு மூன்றாண்டு கால சிறைவாசத்திற்குப் பின் 1945ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் தேதி விடுதலையானார்.

### பதவி
1946ம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு அவையின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர், 1947ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக மூன்றாம் முறையாகப் பதவியேற்றார். இந்தியா சுதந்திரம் அடைந்த இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 1950ம் ஆண்டு இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார் இராசேந்திர பிரசாத். 1952, 1957 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற ஒரே குடியரசுத் தலைவரான இராஜேந்திரப் பிரசாத் 1962ம் ஆண்டு வரை பதவியிலிருந்து, பின் ஓய்வு பெற்றார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டார் என எந்த பணியிலும் ஈடுபடக் கூடாது என அரசு விதித்த தடையை மீறி, சிந்து மற்றும் பஞ்சாப் மாகணங்களில் நிலநடுக்கம் ஏற்பட்ட பொழுது நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். காந்தியின் அழைப்புக்கு இணங்கி ஆங்கிலேய கல்விக்கூடத்தை விட்டு மகனை வெளியேற்றினார். காங்கிரசின் தலைவராகப் போஸிற்குப் பின் ,கிருபாளினிக்குப் பின் பதவியேற்றார்.

### விருது
இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இந்திய முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி காலமானார்.

# 99.93 சதவீத கல்வியறிவு விகிதம்; சண்டிகார் சாதனை




**சண்டிகார், மார்ச் 12:**

நாட்டில் கல்வியறிவு விகிதம் அதிகம் கொண்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வரிசையில் சண்டிகார் இணைந்துள்ளது. இதன்படி, சண்டிகார் யூனியன் பிரதேசத்தில் 99.93 சதவீதம் பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.


இதனை முன்னிட்டு, சண்டிகார் நிர்வாகத்தின் கல்வி துறை நிகழச்சி ஒன்றிற்கு இன்று ஏற்பாடு செய்திருந்தது. இதில் பஞ்சாப் கவர்னர் மற்றும் சண்டிகார் யூனியன் பிரதேசத்தின் நிர்வாகியான குலாப் சந்த் கட்டாரியா தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

முதன்மை செயலாளர் ராஜேஷ் பிரசாத் கவுரவ விருந்தினராக பங்கேற்றார். இதில், அடிப்படை வாசித்தல், எழுதுதல் மற்றும் எண்ணற்ற கல்வி சார்ந்த திறன்களை சமீபத்தில் பெற்று தேர்ந்த, வயது முதிர்ந்தோரை கவுரவிக்கும் வகையில் நிகழ்ச்சியானது நடந்தது. அவர்கள் வயது வந்தோருக்கான கல்வி திட்டத்தின் கீழ் பயிற்சியை பெற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில் பேசிய கட்டாரியா, இது வரலாற்று சாதனைக்கான தருணம் என குறிப்பிட்டார்.

இதனால், நாட்டில் முழு அளவில் கல்வியறிவு பெற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் சண்டிகார் 6-வது இடமும், யூனியன் பிரதேசத்தில் 2-வது இடமும் பெற்றுள்ளது. இதேபோன்று சண்டிகாரில் பெண்களின் கல்வியறிவு விகிதமும் 99.89 சதவீதம் என்ற அளவுக்கு உயர்ந்து உள்ளது.

# இந்தியாவில் சிறுத்தை புலிகளின் எண்ணிக்கை 50—ஐ கடந்து சாதனை

**போபால், மார்ச் 12:**



மத்தியப் பிரதேசத்தின் குன்னோ தேசியப் பூங்காவில் நமீபியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 'ஜவாலா' என்ற சிறுத்தை ஐந்து குட்டிகளை ஈன்றுள்ளது.

1952-ல் இந்தியாவில் சிறுத்தை இனம் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு, 70 ஆண்டுகளுக்குப் பின் தற்போதுதான் அதன் எண்ணிக்கை 50-ஐத் தாண்டியுள்ளது.

இந்த மகிழ்ச்சியான செய்தியை மத்திய சுற்றுச்சூழல் துறை மந்திரி பூபேந்தர் யாதவ் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்த சிறுத்தை குட்டிகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது, இந்திய மண்ணில் ஈன்றெடுக்கப்பட்ட 10-வது வெற்றிகரமான பிரசவம் இதுவாகும். இந்தியாவின் சிறுத்தை பாதுகாப்பு பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்.

இந்த சாதனை கால்நடை மருத்துவர்கள், கள ஊழியர்கள் மற்றும் வன ஊழியர்கள் என அனைவரின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்தக் குட்டிகளின் வருகையுடன், இந்தியாவில் மொத்த சிறுத்தை எண்ணிக்கை தற்போது 53 ஐ எட்டியுள்ளது.

# 6 ஆண்டுகளில் 1,050 பயங்கரவாத தாக்குதல்கள்; மக்களவையில் அரசு தகவல்

**புதுடெல்லி, மார்ச் 12:**

நாடாளுமன்றத்தின் மக்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி. ககோளி கோஷ் தஸ்திதார் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு மத்திய உள்விவகார துறை இணை மந்திரி நித்யானந்த ராய் எழுத்து வடிவில் இன்று பதில் அளித்துள்ளார்.

அதில், நாட்டில் 2017 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையேயான காலகட்டத்தில் 1,050 பயங்கரவாத தாக்குதல்கள் அல்லது சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் பொதுமக்கள் மற்றும் வீரர்கள் காயம் மற்றும் மரணம் அடைந்துள்ளனர். இதன்படி நாடு முழுவதும் பொதுமக்களில் 243 பேர் மரணம் அடைந்துள்ளனர். 599 பேர் காயம் அடைந்தனர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதே காலகட்டத்தில் பாதுகாப்பு படையினரில் 288 பேர் மரணம் அடைந்தனர். 802 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று, பயங்கரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களையும் அவர் வெளியிட்டார். இதன்படி, 687 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 616 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்நிலையில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு விவகாரத்தில் பிரதமர் மோடி தலையிட்டு தீர்வு காண சென்னை ஓட்டல் உரிமையாளர் சங்கங்கள் கடிதம் எழுதி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மதுபானக் கொள்கை வழக்கு: விடுதலையை எதிர்த்து சிபிஐ வழக்கு: கெஜ்ரிவால் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 12:**

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றம் செய்ததற்கான உரிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி, அரவிந்த கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியா உள்பட 23 பேரை கடந்த வாரம் சிறப்பு கோர்ட்டு விடுவித்தது . இந்த நிலையில், கெஜ்ரிவால் உள்பட 23 பேரின் விடுதலையை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் சிபிஐ மேல்முறையீடு செய்தது. இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ சார்பாக ஆஜரான மத்திய அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா, 'கெஜ்ரிவால் மற்றும் மணிஷ் சிசோடியாவை சிறப்பு கோர்ட் விடுதலை செய்தது சட்டத்திற்குப் புறம்பானது. வழக்கின் உண்மைத்தன்மையை முழுமையான விசாரணை மூலம் கண்டறியாமல், வழக்கின் ஆரம்பக்கட்டத்திலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தவறானது" என்று கூறினார். இதையடுத்து, சிபிஐயின் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக கூறிய கோர்ட்டு, இது தொடர்பாக பதிலளிக்குமாறு கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியாவுக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டது. மேலும், இந்த வழக்கின் விசாரணை வரும் 16-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ரூ.8.7 லட்சம் கோடி மதிப்பில் ஜலஜீவன் திட்ட விரிவாக்கம்; மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 12:**



நாட்டில் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதிய அளவிலான குடிநீர் வழங்குவதற்காக 2019-ம் ஆண்டு பிரதமர் மோடியால், ஜலஜீவன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ரூ.8.7 லட்சம் கோடி மதிப்பில் 2028-ம் ஆண்டு டிசம்பர் வரையில், இத்திட்ட விரிவாக்கம் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனை மத்திய மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, உள்கட்டமைப்பு உருவாக்கம் முதல் குடிநீர் வினியோகம் வரையிலான ஜலஜீவன் திட்ட மறுகட்டமைப்பு மற்றும் அதனை அமல்படுத்துவதற்கான மத்திய ஜலசக்தி அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

இதனுடன், நீடித்த கிராமப்புற குழாய் தண்ணீர் வினியோகத்திற்கான சுற்றுச்சூழலியல் அமைப்புக்கும், குடிநீர் நிர்வாகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது என்று கூறினார்.

இந்த ஜலஜீவன் திட்ட மறுகட்டமைப்புக்காக, கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தப்படும். இதனை முன்னிட்டு, மொத்தம் ரூ.8.69 லட்சம் கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இதில், மத்திய அரசின் நிதியுதவி மொத்தம் ரூ.3.59 லட்சம் கோடியாக இருக்கும். கடந்த 2019-20-ம் ஆண்டில் மத்திய அரசின் நிதியுதவி மொத்தம் ரூ.2.08 லட்சம் கோடியாக இருந்தது. அதனை விட தற்போது 1.5 லட்சம் கோடிக்கும் கூடுதலாக அரசு நிதியொதுக்கி உள்ளது. இதன்படி தேசிய அளவில் சீரான, சுஜலாம் பாரத் என்ற டிஜிட்டல் கட்டமைப்பு உருவாக்கப்படும். அதன் கீழ் ஒவ்வொரு கிராமமும் அந்தந்த சேவை பகுதிக்கான தனித்த அடையாள எண் ஒதுக்கப்பெறும். இதனால், ஓரிடத்தில் இருந்து குழாய்க்கு குடிநீர் விநியோக திட்டம் ஆனது முழுமையாக டிஜிட்டல் வடிவில் தகவல்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும்.

# இனி ரூ.20 லட்சம் வரை சொத்து பதிவுக்கு 'பான்' எண் தேவையில்லை

**புதுடெல்லி, மார்ச் 12:**

சொத்து வாங்குபவர்கள், அதற்கான பத்திரப்பதிவின்போது, 'பான்' எனும் வருமான வரி நிரந்தர கணக்கு எண் விவரங்களை அளிக்கும் நடைமுறை இருந்து வருகிறது. 'பான்' எண் இல்லாதவர்கள், அதற்குரிய தனி படிவத்தில் உறுதிமொழி அளிக்க வேண்டும். இதில், தற்போதைய நிலையில், ரூ.10 லட்சம் வரையிலான சொத்துகளை பதிவு செய்யும்போது, 'பான்' எண் அளிப்பது கட்டாய நடைமுறையாக உள்ளது.

இந்த நிலையில், வருமான வரி சட்ட விதிகளில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டுள்ளது. இந்த புதிய விதிகள் ஏப்ரல் 1-ந் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன. இதில், 'பான்' எண் அளிப்பதற்கான பல்வேறு வரம்புகள் மாற்றப்பட்டு உள்ளன.

இதன்படி, ரூ.20 லட்சம் மதிப்பு வரையிலான சொத்துக்களை பதிவு செய்ய, 'பான்' எண் அளிப்பதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ரூ.20 லட்சத்திற்கு மேற்பட்ட பத்திரங்களை பதிவு செய்யும்போது மட்டும், 'பான்' எண் தெரிவித்தால் போதும். இதில், சொத்து வாங்குவது, விற்பது, பரிசாக கொடுப்பது, கூட்டாக மேம்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கு, இந்த விலக்கு பொருந்தும் என புதிய விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோடையில் மின் தடை கூடாது: அதிகாரிகளுக்கு ஆந்திர அமைச்சர் உத்தரவு


**அமராவதி, மார்ச் 12:**

ஆந்திர உள்துறை அமைச்சர் அனிதா அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மின்வாரிய துறை அதிகாரிகள், விபத்து தடுப்பு துறை அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது அமைச்சர் அனிதா 'ஹீட் வேவ் ஆக்ஷன் பிளான் -2026' திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசியதாவது: மத்திய ஆந்திரா, ராயல சீமா மாவட்டங்களில் இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிக வெப்பம் இருக்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டே 2026 திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை, குழந்தைகள், முதியோர்கள் பாதிக்கப்படாதவாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது போன்றவற்றை கடைப்பிடிக்க வேண்டும். தண்ணீர், மோர்ப் பந்தல்கள் அமைப்பது, தண்ணீர் தட்டுப்பாடு, மின் தடை வராமல் கவனமாக இருக்க வேண்டும். மாநிலம் முழுவதும் மின் தடை என்ற பேச்சுக்கே இடம் இருக்க கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா மீதான நம்பிக்கயில்லா தீர்மானம் மீது காரசார விவாதம்

**புதுடெல்லி, மார்ச் 12:**



மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நேற்று கார சார விவாதம் நடைபெற்றது.


நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி வழங்கவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இதையடுத்து, ஓம் பிர்லாவுக்கு எதிராக காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் சார்பில் நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இந்த சூழலில் நேற்று அவையை நடத்திய பாஜக மூத்த எம்.பி. ஜெகதாம்பிகா பால், ஓம் பிர்லாவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் மீது 10 மணி நேரம் விவாதம் நடத்த அனுமதி வழங்கினார். அப்போது, ஜெகதாம்பிகா பால் அவையை நடத்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசும்போது, "மக்களவை சபாநாயகரை நீக்கக் கோரும் தீர்மானம் விவாதிக்கப்படும்போது, ஓம் பிர்லாவால் நியமிக்கப்பட்ட தலைவர்கள் குழுவில் இடம்பெற்றுள்ள ஜெகதாம்பிகா பால் அவையை நடத்தலாம்" என்றார். இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு விவாதத்தை தொடங்கி வைத்து பேசினார்.

# நாடு முழுவதும் வர்த்தக எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு: ஓட்டல்கள், உணவகங்கள் கடும் பாதிப்பு

**புதுடெல்லி, மார்ச் 12:**




வர்த்தக எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஓட்டல்களில் உணவு வகைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சில நாட்களுக்கான சிலிண்டர்கள் மட்டுமே கையிருப்பில் உள்ளதால், மிகுந்த நெருக்கடியை உணர்வதாக ஓட்டல்கள் நிர்வாகங்கள் பலவும் கவலை தெரிவித்துள்ளன. பல இடங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. இதையடுத்து, ஈரான் தரப்பில் பதில் தாக்குதல் தொடங்கியது.

இரு தரப்பும் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில், இதன் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக சரக்கு கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டுள்ளதால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது.

இந்தியா தினசரி பயன்படுத்தும் 195 மில்லியன் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் (MMSCMD) எரிவாயுவில் சுமார் பாதியை இறக்குமதி செய்கிறது. ஹோர்முஸ் நீரிணை மூடக்கப்படுவதற்கு முன்பு, மத்திய கிழக்கிலிருந்து இந்தியா தினசரி சுமார் 60 MMSCMD எரிவாயுவைப் பெற்று வந்தது. இந்நிலையில், இந்தியாவில் எல்பிஜி சிலிண்டர்கள் விநியோகம் தொடர்பாக அரசு தரப்பில் நேற்று (திங்கள்கிழமை) வழங்கப்பட்ட வழிகாட்டுதலில், "எரிவாயு கிடைக்கும் அளவைப் பொறுத்து, கடந்த ஆறு மாத சராசரி பயன்பாட்டின் அடிப்படையில் முக்கிய துறைகளுக்கு அளவான விநியோகம் செய்யப்படும். முன்னுரிமை அடிப்படையில், முதலில் வீடுகளுக்கும் போக்குவரத்து எரிபொருளாக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கும் 100% இயற்கை எரிவாயு வழங்கப்படும்.

உற்பத்தி துறை மற்றும் பிற தொழில்துறை பயனாளர்களுக்கு 80% எல்பிஜி விநியோகிக்கப்படும். சிறு தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு சுமார் 80% அளவிலேயே எரிவாயு விநியோகிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக எல்பிஜி சிலிண்டர்களை நம்பி உணவகங்கள் இருப்பதால் தற்போது அவற்றின் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு நகரங்களில் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள், உணவு வகைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன. அதிக எரிபொருள் தேவைப்படும் பூரி, ஃப்பிரைட் ரைஸ், சைட் டிஷ்சஸ் போன்ற உணவுகளை மெனுவில் இருந்து தற்காலிகமாக நீக்கி இருப்பதாக பல்வேறு உணவகங்கள் தெரிவித்துள்ளன.

# கம்பாலா எருமை பந்தயத்துக்கு தடை கோரிய மனு தள்ளுபடி

**புதுடெல்லி, மார்ச் 12:**

பீட்டா அமைப்பு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், கர்நாடகவின் கடலோர மாவட்டங்களில் கம்பாலா எருமைப் பந்தயம் நடத்தும் வகையில் விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் திருத்தப்பட்டது.

ஆனால், பெங்களூரு, ஷிவ்மோகா ஆகிய மாநகரங்களில் கம்பாலா எருமைப் பந்தயம் நடத்தப்படுவது விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்துக்கும், உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் எதிரானது என்பதால், எருமைப் பந்தயத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# மக்களவையில் ஊதியம், சலுகை பெறாத 2 எம்பிக்கள் - ஆர்டிஐ தகவல்

**புதுடெல்லி, மார்ச் 12:**

18-வது நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 541 எம்பிக்கள் உள்ளனர். மொத்தம் உள்ள 543 இடங்களில் இரண்டு இடங்கள் காலியாக உள்ளன. ஆர்டிஐ-யில் வெளியானத் தகவலின்படி மொத்தம் 481 எம்பிக்கள் தங்கள் மாத ஊதியங்களைப் பெறுகின்றனர். இவர்களில் இரண்டு எம்பிக்கள் தங்கள் மாத ஊதியத்தை வேண்டாம் எனக் கூறிவிட்டனர்.

பாஜகவின் நவீன் ஜிண்டாலும், காங்கிரஸின் டாக்டர் பிமோல் அகோய்ஜாம் ஆகிய இருவரும் இதில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் பாஜகவின் நவீன், ஹரியானாவின் குருஷேத்ரா தொகுதி எம்பி ஆவார். பிரபலத் தொழிலதிபரான இவர், ஹரியனாவில் புகழ்பெற்ற குருஷேத்ரா பல்கலைக்கழகம் நிறுவி அதன் வேந்தராகவும் உள்ளார். இதற்கு முன் ஜிண்டால், 2004-ல் எம்பியாக தேர்வாகி 2014 வரை அப்பதவியை வகித்திருந்தார்.

மற்றவரான காங்கிரஸின் பிமோல், மணிப்பூரின் இம்பால் தொகுதி எம்பி. இவர், டெல்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் சமூக அறிவியல் துறை பேராசிரியர். மணிப்பூரைச் சேர்ந்த இவர் அதன் மைத்தி சமூகத்தைச் சேர்ந்தவர். இந்த இரண்டு எம்பிக்களும் தங்கள் ஊதியத்தை மட்டும் அன்றி தனக்காக அரசு அளிக்கும் இதர சலுகைகளையும் பெற மறுத்துவிட்டனர். இதன் மூலம், பாஜகவின் ஜிண்டாலும், காங்கிரஸின் பிமோலும் தங்கள், பொது சேவையில் அசாதாரண அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களது தேர்தல் பிரமாணப் பத்திரங்களின்படி, இருவரது சொத்துகளில் அதிக வேறுபாடும் காணப்படுகிறது. தொழிலதிபரான நவீன் ஜிண்டாலுக்கு ரூ.1,241 கோடி மதிப்புள்ள சொத்துகள் உள்ளன. பேராசிரியரான முனைவர் பிமோல் அகோய்ஜாமுக்கு ரூ.97 லட்சம் சொத்துகள் மட்டுமே உள்ளன. இருவருக்கும் இடையே இந்த நிதி இடைவெளி இருந்தபோதிலும், இருவரும் சம்பளம் பெறாமல் பணியாற்றுவதாக உறுதியளித்துள்ளனர்.

# மேகாலயாவில் வன்முறை: துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழப்பு

**ஷில்லாங், மார்ச் 12:**

மேகாலயாவில், 'கேரோ ஹில்ஸ் தன்னாட்சி மாவட்டக் கவுன்சில்' தேர்தல் ஏப்ரல் 10-ல் நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த வாரம் தொடங்கியது. வேட்பு மனுவுடன் பழங்குடியினத்தவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என அறிவிக்கப்பட்டது. இதை கேரோ பழங்குடியின அமைப்புகள் வரவேற்றன. ஆனால், பழங்குடியினர் அல்லாத தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராடுகின்றனர்.

இந்நிலையில், துரா பகுதியில் உள்ள துணை ஆணையர் அலுவலகத்தை நேற்று முன்தினம் போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். கலவரம் வெடித்ததால் இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும், தடையை மீறி ஏராளமானோர் இரவு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை கலைக்க போலீஸார் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், அங்கு ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.




## அரிசி மூட்டைகளுக்கிடையே பதுக்கி வைத்து ரூ.2.65 கோடி கஞ்சா கடத்திய 2 பேர் கைது



**சென்னை, மார்ச்.12:** அரிசி மூட்டைகளுக்கு இடையே பதுக்கி வைத்து, ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்கு ரூ.2.65 கோடி மதிப்புள்ள கஞ்சாவை கடத்தி வந்த இருவரை போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் கைது செய்துள்ளனர்.

வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அருகே போலீஸார் கண்காணித்தனர்.

அப்போது அந்த வழியாக ஆந்திராவிலிருந்து அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டு தமிழகம் நோக்கி வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதித்தனர். அப்போது அரிசி மூட்டைகளுக்கு இடையே பண்டல் பண்டலாக சுமார் 530 கிலோ கஞ்சா பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் கஞ்சா கடத்தி வந்த ஆந்திராவைச் சேர்ந்த கோட்டகுண்டு ஜகதீஷ்வர் ராவ், அதே மாநிலத்தைச் சேர்ந்த பாங்கி கோவர்தன் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்கள் கடத்தி வந்த கஞ்சாவின் சந்தை மதிப்பு ரூ.2.65 கோடி என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் கடத்தலுக்கு பயன்படுத்திய சரக்கு வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கஞ்சா கடத்தலின் பின்னணியில் உள்ள சர்வதேச கடத்தல் கும்பல் குறித்து போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## சிங்கப்பூரில் வேலை எனக்கூறி இன்ஸ்டாகிராம் தோழிகளிடம் ரூ.24 லட்சம் மோசடி: பட்டதாரி இளம் பெண் கைது

**சென்னை, மார்ச்.12:** சிங்கப்பூரில் வேலை வாங்கித் தருவதாக இன்ஸ்டாகிராம் தோழிகளிடம் ரூ.24 லட்சம் மோசடி செய்ததாக பட்டதாரி இளம் பெண் கைது செய்யப்பட்டார். மலேசியாவைச் சேர்ந்தவர் ரேகா.

இவரும் சென்னை கொளத்தூரைச் சேர்ந்த சுஷ்மிதா, கரூரைச் சேர்ந்த ஐஸ்வர்யா (28) ஆகிய 3 பேரும் இன்ஸ்டாகிராம் தோழிகள். இளம் பெண்களான இவர்கள் வெவ்வேறு தனியார் நிறுவனங்களில் கை நிறைய சம்பளம் பெறுகின்றனர்.

இந்நிலையில் ஐஸ்வர்யா தனது தந்தைக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு சிகிச்சை அளிக்க பணம் இல்லை என தெரிவித்துள்ளார். இதையடுத்து தோழிகள் வேறு சில நண்பர்களிடம் வசூலித்து பணம் கொடுத்தனர்.

மேலும் அவர், தான் அமேசான் நிறுவனத்தில் அதிகாரியாக உள்தாகவும், சிங்கப்பூரில் உள்ள அமேசான் நிறுவனத்தில் மாதம் 4,000 டாலர் ஊதியத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறியுள்ளார். இதை உண்மை யென நம்பிய தோழிகள் தனது வேலையை விட்டதோடு பணத்தையும் கொடுத்துள்ளனர்.

அந்த வகையில் மொத்தம் ரூ.24 லட்சம் வரை பெற்றுள்ளார். மேலும் தோழிகளுக்கு பணி நியமன ஆணைகளையும் ஐஸ்வர்யா வழங்கினார். அதன் பிறகுதான் அது போலி பணி நியமன ஆணை என தெரியவந்தது.

இதுகுறித்து கேட்க முயன்றபோது, அவரது செல்போன் சுவிட்ச்-ஆப் செய்யப்பட்டது. ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சுஷ்மிதா உள்ளிட்ட தோழிகள் இந்த விவகாரம் தொடர்பாக தரமணி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து ஐஸ்வர்யாவை கைது செய்தனர். இவர் கரூரைச் சேர்ந்தவர் என்றாலும் கோடம்பாக்கத்தில் விடுதி ஒன்றில் தங்கியுள்ளார். மேலும் எம்எஸ்சி படித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊட்டி அரசினர் ரோஜா பூங்காவில் தோட்டக்கலை ஊழியர்கள் காத்திருப்பு போராட்டம்

**ஊட்டி, மார்ச்.12:** நீலகிரி மாவட்டம் ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் வேலை பார்க்கும் தோட்டக்கலைத்துறை பூங்கா ஊழியர்கள் மற்றும் பண்ணை பணியாளர்கள் ஆகியோர் தினக்கூலி மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் கூறியதாவது:-


நீலகிரி, கொடைக்கானல், சென்னை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள 58 பூங்கா மற்றும் பண்ணைகளில் கடந்த 1986-ம் ஆண்டு முதல் தினக்கூலி அடிப்படையிலும், சிறப்பு காலமுறை ஊதியத்திலும் நாங்கள் பணியமர்த்தப்பட்டு வேலை பார்த்து வருகிறோம். ஆனாலும் எங்களின் பணிநிலை மற்றும் ஊதிய விஷயங்களில் போதிய முன்னேற்றம் இல்லை.

தோட்டக்கலைத் துறையில் பணியாற்றும் சிலர் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டு இருந்தாலும், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு வழங்கப்படாமல் இருப்பதால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளோம்.

எனவே சிறப்பு காலமுறை ஊதியத்தை காலமுறை ஊதியமாக மாற்றி வழங்க வேண்டும். மேலும் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிவோருக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும், தினக்கூலி பணியாளர்களுக்கு மாவட்ட கலெக்டர் நிர்ணயம் செய்த ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளோம். எங்களின் கோரிக்கைகளை அரசு விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

## மதுராந்தகம் சிறுமி பாலியல் வன்கொடுமை: பொது நல வழக்கு தாக்கல் செய்தால் விசாரணை - ஐகோர்ட்



**சென்னை, மார்ச்.12:** மதுராந்தகம் சிறுமி பாலியல் வன்கொடுமைசெய்யப்பட்டது தொடர்பாக பொது நல வழக்கு தாக்கல் செய்தால் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவன், தன் தோழிகளான தாம்பரம் பகுதியைச் சேர்ந்த 9ஆம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுமி, அவரது தோழியான 16 வயது சிறுமி ஆகியோருடன், நேற்று முன்தினம் நள்ளிரவு இருசக்கர வாகனத்தில், இரு சிறுமிகளையும் அழைத்துக் கொண்டு அந்தச் சிறுவன், சொந்த ஊரான மதுராந்தகம் அருகே உள்ள கிராமம் நோக்கிச் சென்றுள்ளார்.

மதுராந்தகம் அடுத்த தேவத்தூர் பகுதியில் இருந்து, மது அருந்தி கொண்டிருந்த மர்ம நபர்கள் இருவர் அந்தச் சிறுவனின் இருசக்கர வாகனத்தை பின்தொடர்ந்து வந்துள்ளனர். இதை அறிந்த அந்தச் சிறுவன், இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்றுள்ளார். காட்டுப் பகுதி அருகே செல்லும்போது, சிறுவனின் கட்டுப்பாட்டை இழந்த இருசக்கர வாகனம் நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளது.

அப்போது, பின் தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் இருவரும் சிறுவன் மற்றும் 16 வயது சிறுமியை துரத்தி விட்டு, 14 வயது சிறுமியை அத்திவாக்கம் ஏரி பகுதிக்கு தூக்கிச் சென்று, கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சிறுமி, சிலரது உதவியால் பவுஞ்சூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றுள்ளார்.

அங்கிருந்து, மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சிறுமிக்கு நேர்ந்த கொடுமை குறித்து கேட்டறிந்த மருத்துவர்கள், மேல்மருவத்துார் அனைத்து மகளிர் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக காவல்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேகப்படும் ஒருவரை பிடித்து விசாரணை நடத்தும் போலீஸார், தனிப்படை அமைத்து குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாகவும், சமீப காலமாக தமிழகத்தில் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்து வருவதால் இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்கை விசாரித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என வழக்கறிஞர் சூரிய பிரகாசம் தலைமை நீதிபதி தலைமையிலான முதல் அமர்வில் இன்று அவசர முறையிடு செய்தார். இதை கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, பொது நல வழக்காக தாக்கல் செய்ததால் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக ஒப்புதல் அளித்துள்ளது.

## கள்ளச்சந்தையில் விற்பனை: ஊட்டியில் கேன்களில் பதுக்கிய 200 லிட்டர் பெட்ரோல்-டீசல் பறிமுதல்



**ஊட்டி, மார்ச்.12:** நீலகிரி மாவட்டம் உதகை அருகே கேத்திபாலடா பகுதியில் உள்ள ஒரு சிறிய கடையில் கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்படுவதாக அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப்படையில் மாவட்ட வழங்கல் அதிகாரியின் உத்தரவின்படி பறக்கும் படை அதிகாரி ஜவகர் தலைமையில் அந்தக் கடையில் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது கடையின் திரைமறைவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100-க்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் கேன்களில் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்து அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து நடத்திய சோதனையில் சுமார் 200 லிட்டர் அளவிலான பெட்ரோல் மற்றும் டீசல் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து கடை உரிமையாளரிடம், அதிகாரிகள் விசாரித்தபோது, அதிக விலைக்கு கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதற்காகவே எரிபொருட்களை வாங்கி பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து அதிகாரிகள் அந்த எரிபொருள் கேன்களை பறிமுதல் செய்தனர். மேலும் கடை உரிமையாளரிடம் மேலான விசாரணை நடத்த நடவடிக்கை எடுத்தனர்.

தற்போது பெட்ரோல் தட்டுப்பாடு நிலவுகின்ற சூழலில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக எரிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் விசாரணை மேற்கொண்டு, அத்தியாவசிய பொருட்கள் பதுக்கல் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

## ஓட்டல்களில் மின்சார அடுப்பு பொருத்தினால் தடையின்றி மின்சாரம் கிடைக்கும் - அதிகாரி தகவல்



**சென்னை, மார்ச்.12:** ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டாக நடத்தி வரும் தாக்குதலின் எதிரொலியாக உலகம் முழுக்க பல்வேறு நாடுகளில் எரிபொருள் விநியோகம் தடைபட்டுள்ளது. இதன் காரணமாக எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் வணிக சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இதன் காரணமாக ஓட்டல்களில் சமையல் செய்யும் பணி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. சென்னை, கோவை, மதுரை, சேலம், நெல்லை உள்ளிட்ட பெரு நகரங்களில் உள்ள பெரிய ஸ்டார் ஓட்டல்களில் மின்சார அடுப்புகள் பயன்பாட்டில் உள்ளதால் சிலிண்டர் தட்டுப்பாட்டை ஓரளவு சமாளித்து வருகின்றனர்.

ஆனால் சிறிய நடுத்தர ஓட்டல்களில் முழுக்க முழுக்க வணிகசிலிண்டரை பயன்படுத்தி வருவதால் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓட்டல்களை நடத்த முடியாமல் திணறி வருகின்றனர்.

இவர்களில் பலர் ஓட்டல்களில் மின்சார அடுப்புகளை வாங்கி பொருத்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுபற்றி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணனிடம் கேட்டதற்கு, ஓட்டல்களில் மின்சார அடுப்புகளை பொருத்தினால் தடையின்றி மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் செய்வோம். தமிழ்நாட்டில் மின் உற்பத்தி தேவைக்கு மேல் உள்ளது" என்று தெரிவித்தார்.

## செங்கரைப்பாளையம் அறிவுத்திருக்கோவிலில் கண்ணாடிப் பயிற்சி




மனிதர்களாகிய நாம் அனைவரும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களின் வழியாக நமது உடலில் உள்ள ஜீவகாந்த சக்தியை செலவழிக்கின்றோம். வெளியேறுகிற சக்தியே மீண்டும் நமது உடலுக்கு கொண்டுவர கண்ணாடிப் பயிற்சி மற்றும் தீபப் பயிற்சி ஆகியவற்றை செய்து உடலில் ஜீவகாந்த பெருக்கத்தை செய்து கொள்ளலாம். ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சி, செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் செவ்வாய்க்கிழமைகளில் கண்ணாடி பயிற்சியும், வெள்ளிக்கிழமைகளில் தீபப் பயிற்சியும் நடைபெறுகிறது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெற அன்போடு அழைக்கிறோம்.

## நெல்லை, தென்காசி மாவட்டங்களில் 'திடீர்' மழையால் வெப்பம் தணிந்தது

**நெல்லை, மார்ச்.12:** தமிழகத்தில் கிழக்கு திசை காற்றின் மாறுபாடு காரணமாக இன்று நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும் என்று ஏற்கனவே வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படி மாவட்டங்களில் நேற்று இரவு முதல் சாரல் மழை பரவலாக பெய்தது.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை சில நாட்களாக சுட்டெரிக்கும் கோடை வெயிலின் தாக்கத்தால் அணைகள் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. இந்நிலையில் நேற்று நள்ளிரவு முதல் அணைகள் நீர் பிடிப்பு பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது.

தொடர்ந்து இன்று அதிகாலை முதல் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் திடீரென கனமழை பெய்தது. நாங்குநேரி, களக்காடு, அம்பை, ராதாபுரம் சுற்று வட்டாரங்களில் திடீர் மழையால் வெப்பம் தணிந்தது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சில இடங்களில் சாலைகளில் வெள்ளம் ஓடியது.

அதேநேரம் விளைந்து அறுவடைக்கு தயாரான நிலையில் நெற்பயிர்கள் இருக்கும் நிலையில், திடீர் மழையால் அறுவடை பணிகளில் பாதிப்பு ஏற்பட்டது. மாநகரில் அதிகாலை 4 மணிக்கு தொடங்கி சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக பூமி குளிர்ச்சி அடைந்தது.

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஊத்து எஸ்டேட்டில் அதிகபட்சமாக 12 மில்லிமீட்டரும், நாலுமுக்கில் 8 மில்லிமீட்டரும் மழை பெய்தது.

தென்காசி மாவட்டத்தில் சில நாட்களாக வாட்டி வரும் கடுமையான வெயிலுக்கு நடுவே இன்று காலை 6 மணிக்கு திடீரென வானில் கருமேக கூட்டங்கள் கூடின. தொடர்ந்து சில நிமிடங்களில் பரவலாக மழை பெய்தது. ஆலங்குளம், பாவூர்சத்திரம், தென்காசி, கடையம் சுற்றுவட்டார கிராமங்களில் சுமார் அரை மணி நேரம் பரவலாக மழை பெய்தது.

தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த 2 வாரங்களாக கடுமையான வெயில் வாட்டி வதைத்து வந்தது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் என அனைத்து தரப்பினரும் கடும் அவதி அடைந்த நிலையில், நேற்று நள்ளிரவு முதல் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் திடீர் மழை பெய்தது.

இன்று காலை நிலவரப்படி தமிழ்நாட்டில் மிக அதிகமாக தூத்துக்குடி மாவட்டம் முத்தையாபுரம் பகுதியில் 88 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தூத்துக்குடி விமான நிலையத்தில் 67 மில்லி மீட்டர் மழையும், புதுக்கோட்டையில் 47 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

ஸ்ரீவைகுண்டம், முடிவைத்தானேந்தல், விட்டிலாபுரம், வல்லநாடு, ஓட்டப்பிடாரம், பன்னம்பாறை என அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. இந்த திடீர் மழையால் மாவட்டம் முழுவதும் வெப்பம் தணிந்து குளிர்ந்த சூழ்நிலை நிலவியது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று நள்ளிரவு தொடங்கி, நாளை அதிகாலை நேரம் வரையிலும், குறிப்பாக தூத்துக்குடி, திருச்செந்தூர் பகுதிகளில் மீண்டும் கனமழை பெய்யும் என தனியார் வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## ஸ்டிரெச்சரில் படுத்தபடி 10-ம் வகுப்பு தமிழ் பரீட்சை எழுதிய மாணவர்



**சென்னை, மார்ச்.12:** சென்னை மடிப்பாக்கம் பிரின்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளியில் 10-ம் வகுப்பு படிக்கும் மாணவர் சாய் கார்த்திக் (வயது 15) இவர் தனது வீட்டு மாடியில் இருந்து இறங்கும்போது படிக்கட்டில் தவறி விழுந்து படுகாயம் அடைந்தார். அவரது முதுகெலும்பில் (பைனல் கார்டு) பலத்த அடிபட்டதால் அவரால் உட்காரவும் நடக்கவும் முடியவில்லை. படுத்த படுக்கையில் இருந்தார்.

இந்த நிலையில் இன்று 10-ம் வகுப்பு தேர்வு தொடங்கியதால் ஆம்புலன்சில் சென்று பரீட்சை எழுதுவதற்கு கல்வித்துறையில் அனுமதி கேட்டிருந்தார். அவருக்கு பள்ளிக்கல்வித்துறை சிறப்பு அனுமதி வழங்கியது. அதன்பேரில் மாணவருக்கு உதவ வேறொரு பள்ளியில் இருந்து ஆசிரியை வரவழைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி இன்று ஆம்புலன்சில் பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளிக்கூடம் வந்த மாணவர் சாய் கார்த்திக் ஸ்டிரெச்சரில் படுத்த படி 10-ம் வகுப்பு பரீட்சை எழுதினார்.

தமிழ் பரீட்சை கேள்விக்கான பதிலை அவர் சொல்ல சொல்ல அருகில் இருந்து ஆசிரியை ஒருவர் விடைத்தாள் எழுதினார்.

## வெள்ளை சாத்துபடி திருக்கோலம்



மேற்கு மாம்பலம் - ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ செங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்
விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். நான்காம் நாள் மாலை பமரீ பெருமாள்- வெள்ளை சாத்துபடி திருக்கோலம்- சந்திரப்பிரபை.

# தாய்லாந்து தமிழ் பள்ளியில் ரமலான் சிறப்பு சொற்பொழிவு!



**பேங்காக், மார்ச்.12:** நீடூர் ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதாவின் பேராசிரியரும் ஜின்னா தெரு பள்ளிவாசலின் தலைமை இமாமும் ஆன மௌலவி ஹாஃபிஸ் எம். முஹம்மது ஷுஐப் மிஸ்பாஹி அவர்கள் பேங்காகில் தாய்லாந்து தமிழ் சங்கத்தின் தமிழ் பள்ளிக்கு வருகை தந்துள்ளார்கள்.

புனிதம் நிறைந்த ரமலான் மாதம் முழுவதும் தராவீஹ் தொழுகையின் பிறகு, சிறந்த முறையில் தெளிவாகவும் விளக்கமாகவும் சிறப்புச் சொற்பொழிவினை செய்து வருகிறார்கள்! அப்போது நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன் அவர்கள் அவரை சந்தித்துப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்!

# உளுந்தூர்பேட்டை வட்டார கல்வி அலுவலகத்தில் தீ விபத்து - புத்தகங்கள் எரிந்து சேதம்

**உளுந்தூர்பேட்டை, மார்ச்.12:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில்வட்டார கல்வி அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் தொடக்க கல்வி அலுவலகமும் இயங்கி வந்தது.



இந்த நிலையில் இந்த அலுவலகத்தில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை உள்ள முதல் பருவம், 2-ம் பருவம், 3-ம் பருவம் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அலுவலகத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனை அறிந்த அலுவலக ஊழியர்கள் உடனடியாகஉளுந்தூர்பேட்டை தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு துறை வீரர்கள் தீயை அணைத்து கட்டுக் குள் கொண்டு வந்தனர்.

இதில் அலுவலகத்தில் இருந்த பல லட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் தீயில் எரிந்து கருகி சேதமானது.

மேலும் தீ விபத்து குறித்து உளுந்தூர்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து மர்ம நபர்களால் தீ வைக்கப்பட்டதா அல்லது மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா என பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க முப்பெரும் விழா





**திருச்சிராப்பள்ளி, மார்ச்.12:** திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத்தின் குளிர்மை சிற்றரங்கில் 09.03.26 அன்று மாவட்ட எழுத்தாளர் சங்கம் சார்பில் "முப்பெரும் விழா" நடைபெற்றது. சர்வதேச பெண்கள் தினம் அமர்வு பொருளாளர் முனைவர் சங்கரி சந்தானம் தலைமையில் நடைபெற, முனைவர் சாத்தம்மைப் பிரியா, மேனாள் வட்டார கல்வி அலுவலர் இரா.ஜெயலட்சுமி இருவரும் உரை வீச்சு நிகழ்த்தினர்.

கவிஞர் கவி செல்வா தலைமையில் நடைபெற்ற " எழுவாய் பெண்ணே" கவியரங்கில் கவிஞர் தனலெட்சுமி பாஸ்கரன் - வையத்தலைமை கொள் கவிஞர் மாறன் மகா- அறிவை விழுங்கு கவிஞர் த.கமலி - சிறகை விரி கவிஞர் ஜோ.காயத்ரி - வானம் தொடு என்ற தலைப்புகளில் கவிதை வாசித்தனர். முன்னதாக தோழர் நல்லக்கண்ணு நினைவேந்தல் கூட்டத்தில் திரு.இந்திரஜித், திரு ஜவஹர் ஆறுமுகம், கவிஞர் வீ.கோவிந்தசாமி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். நிகழ்ச்சியில் ஆளுநரிடம் "சிறந்த சமூக சேவகர்" விருது பெற்ற யோகா ஆசிரியர் விஜயகுமார் பாராட்டு பெற்றதுடன், அவர் தொகுத்த "திருச்சி பெண் எழுத்தாளர்கள்" நூலும் வெளியிடப்பட்டது.இனிய நந்தவனம் இதழ் ஆசிரியர் திரு. சந்திரசேகரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க, திரு. பெ.வி. ஜயகுமார் நன்றி நவில , விழா இனிதே நிறைவடைந்தது.

## வெள்ளி ஹம்ச வாகனம்




ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ மூன்றாம் திருநாள் இரவு வெள்ளி ஹம்ச வாகனம் ஸ்ரீ பெருமாள் இராஜ அலங்காரம், புறப்பாடு.

# பழனி மாரியம்மன் கோவில் மாசிதிரு விழாவை முன்னிட்டு வ உ சி மன்றம் சார்பில் 1008 பால்குட ஊர்வலம்








**பழனி, மார்ச்.12:** திண்டுக்கல் மாவட்டம் பழனியில் மிகவும் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் மாசித்திருவிழா ஆண்டு தோறும்விமர்சையாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டிற்கான விழாவை முன்னிட்டு வ.உ.சி. மன்றம் சார்பில் பிரம் மாண்ட பால்குட ஊர்வல ம் நடைபெற்றது.

பழனி காந்தி மார்க்கெட் பகுதியில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலத்தில், 1008க்கும் மேற்பட்ட பெண் பக்தர்கள் ஓரே சீருடை அணிந்து பால்குடம் ஏந்திச் சென்றனர். இந்த ஊர்வலமானது நகரின் முக்கியப் பகுதிகளான கடைவீதி மற்றும் பேருந்து நிலையச் சாலை வழி யாகச் சென்று மாரியம்மன் கோவிலை அடைந்தது. கோவிலில் அம்மனுக்குப் பாலாபிஷேகம் செய்யப்பட்டு, சிறப்புப் பூஜைகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து அம்மனுக்குக் கண்ணைக் கவரும் வகையில் அன்னாபிஷேகம் செய்யப்பட்டு, பக்தர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

விழா நிகழ்ச்சியில் எஸ். என்.செந்தில்குமார், திமுக நகர செயலாளர் வேலுமணி, தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப் பின் பழநி மாவட்டத் தலைவர் ஜே.பி.சரவ ணன், நகராட்சித் தலை வர் உமாமகேஸ்வரி, நிகழ்ச்சியில் சித்தனா தன் சன்ஸ் எஸ். ஜி.பழனி வேல், எஸ்ஜி தனசேகர், முன்னாள் எம்எல்ஏ வேணுகோபாலு, அதி முக நகர செயலாளர் முருகானந்தம், அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட நிர்வாகி குகன், வஉசி மன்ற தலை வர் அசோக், பொருளா ளர் சுந்தர், சாய்கிருஷ்ணா மருத்துவமனை நிர்வாகி சுப்புராஜ், கவுன்சிலர் கள் முருகபாண்டியன், இந்திரா திருநாவுக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வ.உ.சி. மன்ற நிர்வாகிகள் மற்றும் ஊர் முக்கியப் பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தால் பழனி நகரம் ஆன்மீகக் களைகட்டியது.

விழாவில் பழனி மாரியம்மனுக்கு அன்னாபிஷேகம் உற்சவசாந்தி நடைபெற்றது. சுமார் மூன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது.

## அரசியல் கார்னர்

# தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க.வா?- தி.மு.க.வை வீழ்த்த அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும்: கடம்பூர் ராஜூ



**கோவில்பட்டி, மார்ச்.12:** தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே செண்பகபேரியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து புதியதாக கலையரங்கம் கட்டுவதற்கான தொடக்க விழா நடைபெற்றது.

இதில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜூ கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

தீப்பெட்டி தொழிலுக்கு பெரும் சவாலாக இருக்கும் பிளாஸ்டிக் லைட்டர் பிரச்சனை, மெழுகு தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு குறித்து தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மத்திய மந்திரி பியூஸ் கோயலை சந்தித்து முறையிட்டுள்ளனர்.

பிரச்சனை தொடர்பாக விரைவில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் உறுதி அளித்துள்ளார். கரூர் சம்பவம் தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் ஏற்கனவே சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராகி உள்ளார். வழக்கமான நடைமுறைதான். இதற்கும், அரசியலுக்கும் சம்பந்தப்படுத்து வது சரியாக இருக்காது என்றார்.

அப்போது தேர்தல் தேதி இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி அமைதியாக இருக்கிறதே என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறியதாவது:-

தி.மு.க. கூட்டணி அதைவிட அமைதியாக இருக்கிறது. தி.மு.க. கூட்டணி ஏற்கனவே இருக்கிற கூட்டணி. நாங்கள் கூட பாராளுமன்ற தேர்தலில் பிரிந்து போட்டியிட்டு தற்போது இணைந்திருக்கும் புதிய கூட்டணி. தொடர்ந்து சட்டமன்றத் தேர்தல், ஊரக உள்ளாட்சித் தேர்தல், பாராளுமன்ற தேர்தல் என தொடர்ந்து ஏற்கனவே கூட்டணியில் இருக்கும் தி.மு.க. கூட்டணியிலேயே தொகுதி பங்கீடு இன்னும் பிரிக்க முடியவில்லை. காங்கிரஸ் தான் இறுதியாக அவர்கள் கூட்டணியில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதற்கு முன்பாகவே நிறைய கட்சிகளுடன் ஒப்பந்தம் உறுதி செய்தனர். அந்தக் கட்சிகள் எல்லாம் சிறிய கட்சிகள் தான். ஒற்றை இலக்கத்தில் சீட்டு கொடுக்கப்போவதாக சொல்கின்றனர். அதில் கூட ம.தி.மு.க. மாறுபட்ட கருத்தோடு இன்று உயர்மட்ட குழு கூட்டம் நடத்துகின்றனர். அவர்களுக்கு என்ன நிலைமையோ தெரியவில்லை. பாவம் எத்தனை சீட்டு கேட்டார்கள், எத்தனை கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. அதேபோல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சரியில்லை என்று கூறி உள்ளனர்.


தேசிய ஜனநாயக கூட்டணியில் எவ்வித பிரச்சனையும் இல்லை. கூட்டணிக்கு அ.தி.மு.க. தான் தலைமை. அ.தி.மு.க. தனி பெரும்பான்மையாக வெற்றி பெறும். அப்போது எடப்பாடி பழனிசாமி தான் முதலமைச்சர் என்று மத்திய மந்திரி பியூஸ் கோயல் தெளிவாக கூறி உள்ளார்.

தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்பது அ.தி.மு.க.வின் கொள்கையாக இருக்கிறது. சகோதரர் விஜய் கட்சி தொடங்கியது முதல் அதைத்தான் கூறி வருகிறார். தன்னுடைய அரசியல் எதிரி தி.மு.க. என்று சொன்னது மட்டுமின்றி அனைத்து பிரசார கூட்டங்களிலும் அதை மையப்படுத்தி தான் பிரசாரம் செய்கிறார்.

எங்களை பொறுத்தவரை தி.மு.க.வை வீழ்த்த எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளோம். அதன் பிறகு அவங்க அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

டாக்டர் ராமதாஸ்-சசிகலா சந்திப்பு குறித்து அவர்கள் தான் அதைக் கூற வேண்டும். உரிய சந்திப்பு குறித்து வெளியில் ஏதாவது தெரிவித்திருந்தால் அது பற்றி கருத்து கூறலாம். சந்திப்பின் சாராம்சம் வெளிவந்தால் பதில் கூறலாம். யூகமாக கூற முடியாது என்றார்.

# பெண்கள், குழந்தைகள் வாழத்தகுதியற்ற மாநிலமாக சீரழிந்த தமிழ்நாடு!- அன்புமணி கண்டனம்



**சென்னை, மார்ச்.12:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சென்னையை அடுத்த மதுராந்தகம் பகுதியில் 14 வயது சிறுமி இரு மனித மிருகங்களால் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. திமுக ஆட்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அவற்றைத் தடுக்கத் துப்பில்லாமல் திமுக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

சென்னை தாம்பரத்தில் இருந்து மதுராந்தகத்தை அடுத்த கீழக்கண்டை கிராமத்தை நோக்கி இரு சக்கர ஊர்தியில் 17 வயது சிறுவனும், இரு சிறுமிகளும் திங்கள்கிழமை இரவு சென்று கொண்டிருந்த நிலையில், தேவத்தூர் பகுதியில் மது போதையில் இருந்த இரு மனித மிருகங்கள் அவர்களை இரு சக்கர ஊர்தியில் விரட்டிச் சென்று தாக்கியுள்ளனர். அதனால் இரு சக்கர ஊர்தியில் சென்ற சிறுவனும், இரு சிறுமிகளும் தவறி விழுந்த நிலையில், அவர்களை இரு மனித மிருகங்களும் சுற்றி வளைத்துள்ளனர். அவர்களில் சிறுவனும், ஒரு சிறுமியும் தப்பி ஓடிவிட்ட நிலையில், சிக்கிக் கொண்ட ஒரு சிறுமியை இரு மிருகங்களும் சிதைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட அந்த சிறுமி உதவுவதற்கு கூட ஆள் இல்லாமல் அங்கிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நடந்தே சென்று சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார். திமுக ஆட்சியில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதற்கு இந்த கொடிய நிகழ்வு தான் சான்று ஆகும். அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை, ஆரம்பாக்கம் சிறுமி பாலியல் வன்கொடுமை, கோவை கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை வரிசையில் இந்தக் கொடூரமும் இணைந்திருக்கிறது. ஆனால், ஆட்சியாளர்களுக்கு இது பற்றிய எந்தக் கவலையும் இல்லை. நாளொரு விழாவும், பொழுதொரு கொண்டாட்டமாகவும் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை மட்டும் 129% அதிகரித்திருக்கிறது. திமுக ஆட்சியில் பெண்களும், குழந்தைகளும் வாழ்த்தகுதியற்ற மாநிலமாக தமிழ்நாடு மாறி விட்டது என்பதற்கு இந்த புள்ளிவிவரங்கள் தான் கொடூரமான சான்று ஆகும். தமிழ்நாட்டை இந்த அளவுக்கு சீரழித்த திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தைக் கற்பிப்பார்கள் என்று கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com